செய்தி

சிங்கப்பூர்

# NTU தலைவர் சுப்ரா சுரேஷ் பதவி விலகல் - அமெரிக்காவில் உள்ள குடும்பத்தின் அருகே வசிக்க விருப்பம்

வாசிப்புநேரம் - 1 நிமிடம்



படம்: NTU

வெளியீடு : 06 Jun 2022 05:30PM
புதுப்பிப்பு : 06 Jun 2022 05:30PM

பேராசிரியர் சுப்ரா சுரேஷ் (Subra Suresh), நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து பதவி விலகுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதி வரை அவர் அந்தப் பொறுப்பை வகிப்பார்.

அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்கக் குழுவொன்று அமைக்கப்படும் எனப் பல்கலை குறிப்பிட்டது.

5 ஆண்டுகளாகத் தலைவர் பதவியில் இருந்த பேராசிரியர் சுரேஷ், அமெரிக்காவில் உள்ள தமது குடும்பத்துடன் சேர்ந்து வாழ்வதற்காக அந்த முடிவை எடுத்ததாகக் கூறினார்.

கிருமித்தொற்றால் வெகுநாளுக்குக் குடும்பத்தைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டதாக அவர் சொன்னார்.

தமது முதல் பேரக் குழந்தையின் பிறப்பு, குடும்பத்தின் அருகே இருக்க வேண்டும் என்ற ஆசை ஆகியவற்றால் நினைத்ததைவிடச் சீக்கிரமாகவே அமெரிக்கா திரும்ப முடிவெடுத்ததாக 66 வயதாகும் பேராசிரியர் சுரேஷ் தெரிவித்தார்.

அவர் நன்யாங் பல்கலையின் 4ஆவது தலைவர்.

2018ஆம் ஆண்டு பேராசிரியர் சுரேஷ் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

**தொடர்புடைய தலைப்புகள்**

[நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம்]